# தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2023 கடகம் (ஆகத்து — I) விலை உருபா 1-50 (இதழ் எண்: 157)


# சிதம்பரம் காவலர்களை ஏன் இன்னும் சிறைப்படுத்தவில்லை?

## ஞாயம், நேர்மை, நெறி (நீதி) முறை எதுவும் இல்லை, செயலலிதா ஆட்சியில்!

### எத்தனைத் தவறுகள், கொடுமைகள், ஊழல்கள், கொள்ளையடிப்புகள் நடந்தாலும் செயலலிதாவைக் கீழிறக்க விடமாட்டார்கள், பார்ப்பனர்கள்!

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

இந்தக் கொடுமை ஊர், உலகமெல்லாம் தெரிந்தும், பல இதழ்கள் கண்டித்து எழுதியும், பல இயக்கத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்தும், இத் தமிழகத்தை ஆள வந்த செயலலிதா என்னும் கொடுங்கரிசன் (பாவி), இன்னும் அக்காவலர்களைத் தளைப்படுத்தவோ, தண்டிக்கவோ இல்லை என்றால், இந்த நாட்டில் நெறிமுறை எங்கே? ஞாயம் எங்கே? நேர்மை எங்கே? —என்று கேட்க வேண்டியுள்ளதே! அதற்கு என்ன செய்வது? எங்கே போய்த் தீர்வைத் தேடுவது?

***'மாதவர் நோன்பும் மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனின் இன்றால்'***— என்று தன் மகன் உதய குமாரன், மணிமேகலையைத் தேடிக் காம விருப்புடன் அலைகையில், காஞ்சனன் என்னும் விஞ்சையனால் கொல்லப்பட்ட செய்தியறிந்த சோழ அரசன் மனம் பதறி, உரைத்த சொற்கள் இவை. "நாட்டைக் காக்க வேண்டிய காவலனின் காவல் முறை சரியில்லாமற் போனால், அறவோர் நோன்பு மேற் கொள்வதும், மகளிர் கற்போடு வாழ்வதும் இயலாமற் போகும்" என்று வருந்துகிறான்.

அத்துடன் அவன் அமையவில்லை. தானே ஆவின் கன்றுக்காகத் தன் மகன் உயிரை வாங்கிய அறநெறிச் சோழன் வழி வந்தவன். அந்த மரபுக்குத் தீங்கு நேரிட்டு விட்டதே என்று உள்ளம் நைகின்றான். எனவே, "அத்தகைய மன்னன் வழி வந்த என்னுடைய மகன், ஒரு பெண்ணை நாடி,

Scanned with CamScanner

அவனிடம் தவருக நடக்க முற்படுகையில் கொல்லப்பட்ட இழிவான செய்தி, பிற நாட்டு வேந்தர்களின் செவியில் போய்ச் சேர்வதற்கு முன் அவனைத் தீயில் வைத்துச் சுட்டுச் சாம்பலாக்குக" என்று தன் மகனையே கொல்லச் செய்து காவலர்களுக்குக் கட்டளையிட்டு அறம் வழங்குகிருன் சோழன்.

"மகனை முறை செய்த மன்னவன் வழியோர்
துயர்வினை யாளன் தோன்றினன் என்பது
வேந்தர் தம் செவி யுறுவதன் முன்னம்
ஈங்கிவன் தன்னையும் ஈமத் தேற்றுக"
—மணிமேகலை—சிறைசெய் காதை.

—இத்தகைய கோலோச்சிய அரச மரபு எங்கே? இன்று இந்தப் புரட்டுச் செல்வி அரசோச்சும் திரைப்பட மரபு எங்கே?

அந்த நாள் வரலாறுகள் இருக்கட்டும். இன்று, கடந்த சூன் மாதத்தில் திருவனந்தபுரத்தில் கல்லூரியின் காவல்காரர் ஒருவரை ஐந்து காவலர்கள் ஏதோ ஒரு காரணத்துக்காக அடித்துக் கொன்றனர் என்பது தெரிந்தவுடன், கேரள அரசு உடனே அந்த ஐவரையும் சிறைப்படுத்தவில்லையா? இங்கு ஓர் ஏழைப் பெண்ணை ஐந்து காவலர்கள் கொடுமையாகப் பாலியல் வன்முறை செய்ததுடன், அதைத் தடுக்க முயன்ற அவள் கணவனைக் கொன்ற அக் காவலர்கள் மீது ஏன் எந்த வகையான நடவடிக்கையும் எடுக்கவில்லை? அந்த நிலை செயலலிதாவுக்கு வேண்டியவர்கள் எவருக்காவது நடந்திருந்தால் இதுவரை அவர் பாராமுகமாக இருந்திருப்பாரா? அவரது அண்ணன் குடும்பம் ஒன்றைக் காஞ்சிபுரத்துக் கருகில் காவலர்கள் தடுத்து நிறுத்தி ஒரு குற்றம் பற்றி உசாவினர் என்பதற்காக, அக் காவலர்கள் மேல் உடனே கடுமையான நடவடிக்கை எடுத்த செயலலிதா, அண்ணுமலை நகர் காவலர்கள் மீது மட்டும் இவ்வளவு கரிசனம் காட்டுவது ஏன்? அவர்களால் கெடுக்கப் பட்டவள் ஓர் ஏழை தாழ்த்தப்பட்ட பெண்ணுகவும், அடித்துக் கொல்லப்பட்டவர் அவள் கணவனுவும் உள்ளனர் என்பதாலா? இஃதென்ன கொடுமை?

தன் சேலையைப் பிடித்து இழுத்தார்கள் என்று பொய்க்குரல் எழுப்பி, அதற்காக ஊரே கேள், நாடே கேள் என்று கற்புக் கடம் பூண்ட பொற்புடைப் பாவை போல்—போலி நடிப்புக் காட்டிய திரைக் கூத்தியின் ஆட்சியில் நெறி(நீதி) ஊமையானது; அறம் மறமானது!

முதலமைச்சர் பதவியிலமர்ந்த இவரே இப்படி என்ருல், இவரின் கீழ் உள்ள அமைச்சர்களோ 'ஆசிரியர் நின்று பெய்தால், மாணவர்கள் ஓடிக் கொண்டே பெய்வார்கள்' என்றபடி, இவருக்கு மேல் பல படிகள் கொடுமையாளர்களாகவும், ஊழல் மன்னர்களாகவும், அரம்பர்களாகவும், கொள்ளையர்களாகவும் உலா வருகிருர்கள்.

செயலலிதாவின் வானளாவிய வெட்டுருவ அட்டையை நிறுத்திய ஓர் அமைச்சர் கூறுகிருர், "அதை மக்கள் வரவேற்கிருர்கள்" என்று. எவ்வளவு வாய்க் கொழுப்பு! உணவுப் பொருள்களின் விலை அளவுக்கு மீறி ஏறியுள்ளதே! அதை மக்கள் ஏற்றுக் கொள்கிருர்களா? நாட்டில் எங்குப் பார்த்தாலும் கொலை, கொள்ளை, வழிப்பறிகள் ஆகியவை மிகுந்திருக்கின்றனவே, அவற்றை மக்கள் ஏற்றுக்கொள்கிருர்களா? இல்லை, மழலையர் பள்ளி முதல் கல்லூரி வரை, நகராட்சி முதல் அரசு வைப்பகங்கள் வரை, இலக்கக் கணக்கில்—கோடிக் கணக்கில் ஊழல், கையூட்டுகள் தங்கு தடையின்றித் தாராளமாக நடக்கின்றனவே அவற்றையெல்லாம் மக்கள் ஏற்றுக் கொள்கிருர்களா? மேலும் அவர் கூறுகிருரே, செயலலிதா வெட்டுருவ அட்டையை(கட்அவுட்டை) மக்கள் ஏற்றுக் கொள்கிருர்கள் என்று, அவர்கள் எந்த மக்கள்? அ.தி.மு.க.வின் ஆரவார, ஆடம்பர, அழிம்பு அரசியல் நடவடிக்கைகளில் ஏமாறி நிற்கின்ற பேதை மக்களா? இல்லை, இவரை ஏன் முதலமைச்சராக வரவிட்டோம் என்று மண்டையைப் பிடித்துக் கொண்டு இடிந்துபோய் உட்கார்ந்திருக்கிருர்களே, அந்த நடுத்தர மக்களா? யார் ஏற்றுக் கொள்கிருர்கள்?

மொத்தத்தில் காவல் துறையைப் பல வகையிலும் ஊக்கப்படுத்தித் தமக்குச் சார்பாக்கிக் கொண்டார் செயலலிதா! அத்துடன் இதற்கு முன் தமிழக முதல்வர்களாக இருந்துள்ள எவருக்குமே இல்லாத அளவில் தமக்கு வலிவான பாதுகாப்பையும் அரசுப் பணத்தில் அமைத்துக் கொண்டார். அதற்கு விடுதலைப் புலிகள் உட்படப் பல்வேறு வகையான பொய்க் காரணங்களைச் சுவடித்து மக்களிடம் கூறி வருவது அவருடைய அன்ருடப் பணியாகப் போய்விட்டது.

காவல் துறையைத் தம் கைகளில் வைத்துக் கொண்டு, அதைத் தம் செல்லப்பிள்ளையாகப் பேணி வருவதால், அதன் கொடுமையான நடவடிக்கைகளால் இறப்போர் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. இதனுல் பாலியல் வன்முறைக்கு உள்ளாகும் ஏழைப் பெண்களும் மலைவாழ் பேதைப் பெண்களும் அதிகமாகி வருகிருர்கள். இவையன்றி வெளிப்படையாகத் தெரியவராத செய்திகள், மூடி மறைக்கப்படும் கொடுமை நிகழ்ச்சிகள், வெளியே தெரிந்தவற்றைவிடப் பலமடங்கு கூடுதலாக இருக்கும் என்பதைத் தவறு என்று கூற முடியாது.

இவ்வாறு செயலலிதா ஆட்சியில் எத்தனையோ தவறுகள் நடக்கின்றன. கொடுமைகள் ஏராளம்! ஊழல்கள், கையூட்டுகளுக்கு அளவே இல்லை. முன்பெல்லாம் அரசு அலுவலகங்களின் படிக்கட்டெல்லாம் காசு கேட்கும் என்று சொல்லப்பட்டது, இப்-

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

# வழக்கறிஞர் பி.வி. பக்தவத்சலம் அறிக்கை!

## 'விடுதலைப் புலிகளுக்கு இட்ட தடை'யின் உள்நோக்கம் தமிழ்த் தேசிய இனத்தின் மீதான அடக்குமுறைகளை அதிகரிப்பதே!

அண்டை நாடான இலங்கையில் இயங்கும் விடுதலைப் புலிகள் அமைப்பு இந்திய அரசால் தடை செய்யப்பட்டிருக்கிறது. 'இந்தியத் தேசியத்தின் இறையாண்மைக்குப் புலிகளால் ஏதம்(ஆபத்து) என்றும், இந்தியாவிலிருந்து தமிழகத்தைப் பிரிப்பதற்குப் புலிகள் உதவுகிறார்கள்'' என்றும், முன்னாள் தலைமையமைச்சர் இராசீவைக்கொலை செய்தது புலிகள் இயக்கம்தான் என்னும் கணிப்பில் புலிகள் அமைப்பைச் சட்டப் புறம்பான அமைப்பு என இந்திய அரசு அறிவித்திருக்கிறது. கூடவே புலிகள் இயக்கத்திற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவும் ஆதரவாளர்கள் கடுமையாக ஒடுக்கப்படுவார்கள் எனவும் இந்திய அரசு எச்சரித்திருக்கிறது.

இராசீவ் கொலையைப் பின்னணியாகக் கொண்டு ஓர் இயக்கத்தைத் தடை செய்வதும், அக்கொலை பற்றிய உசாவல்(விசாரணை) தொடங்கு முன்னரே அவ்வியக்கத்தைத் தடை செய்வதற்கும் உண்மையில் வேறொரு முகாமையான உள்நோக்கம் இருக்கிறது. இத் தடை புலிகளை ஒடுக்குவது என்ற பெயரில் நடுவண் அரசின் குறிப்பாக மாநில அரசின் 'செ' ஆட்சியின் அலங்கோலங்களைத் திறனாய்வு செய்யும் எதிர்க்கட்சிகளையும் ஈழ மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் புரட்சிகர, குடிநாயக இயக்கங்களையும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களையும் ஒடுக்குவதே இந்த அறிவிப்பின் உள்நோக்கம்.

இந்த உண்மையைப் புலிகளைத் தடை செய்வதை வரவேற்றுப் பேசுபவர்களும் கூட மறுக்கவில்லை. தமிழக இ. கட்சித் தலைவர் ராமமூர்த்தி "புலிகள் இயக்கத்துடன் கூடவே தமிழகத்தில் தமிழின இயக்கங்களும் தி.மு.க வும் தடைசெய்யப்பட வேண்டும்'' என கோரிக்கை விடுத்துள்ளதையும், புலிகளுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்பு வைத்துள்ள ஆதரவாளர்களை விட்டுவைக்க மாட்டோம் என நடுவண் உள்துறை அமைச்சர் மிரட்டியிருப்பதும் ஈண்டு கவனிக்கத் தக்கன

தமிழகத்தில் 'செ' அரசு பதவியேற்ற நாள் கொண்டே தமிழ்த்தேசிய இன உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் மீதும், எதிர்க்கட்சிகள் மீதும் தொடர்ந்து அடக்குமுறை ஏவப்பட்டு வருகிறது. 'செ'யின் பார்ப்பனிய நலக் கொள்கைகளுக்கு எதிராகவும், அவரின் அலங்கோலமான. ஊதாரித்தனமான ஆட்சியைக் கண்டித்தும், 'ஈழ' ஏதிலிகளுக்கும், தமிழ் இன மக்களுக்கும் அவர் தொடர்ந்து இழைத்து வரும் இரண்டகம்(துரோகம்)குறித்தும் எழும் எதிர்ப்புக் குரல்களை அவர் 'தடா' என்., எசு. ஏ' போன்ற கருப்புச் சட்டங்கள் மூலம் ஒடுக்கி வருகிறார். தமக்குப் போற்றி பாடாத செய்தியிதழ்களை மிரட்டியும், அரசு எந்திரத்தைக் கொண்டு இடையூறு செய்தும், தன் வலிவால் பேரம் பேசியும் செய்தித்தாள் உரிமையையும் கருத்து உரிமையையும் பறித்து வருகிறார்.

கடுமையான வறட்சி, விலைகள் உயர்வு, வேலையின்மை போன்ற நிலைமைகளினால் 'செ' ஆட்சி மீது தமிழக மக்கள் மேன்மேலும் நிறைவற்ற தன்மை அடைந்து வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் தமது புகழுருவத்தை(இமேஜை)க் காப்பாற்றிக் கொள்ளவும், தம் அடக்குமுறை நடவடிக்கைகளுக்குப் புதிய காரணம் தேடும் முகமாகவும், புலிகளால் தம் உயிருக்கு எந்நேரமும் ஏதம் (ஆபத்து) என்ற பெயரில் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் தடை போடக் கோரி வந்தார். 'புலிகள் ஆதரவாளர்கள்' என்ற பெயரில் கொஞ்சம் நஞ்சம் இருக்கும் குடிநாயக உரிமைகளையும் பறித்து விடுவதே அவர் எண்ணம்.

தமது விரிவாக்க நலன்களுக்கும், இலங்கையுடன் நெருக்கமடையவும் 'புலிகள்மீதான தடை' வாய்ப்பானது(சாதகமானது) என்பதுடன், இத் தடை மூலம் தமிழகத்தில் தேசிய இனஉரிமைக் குரல் எழுப்புவர்களையும், மா—லெ புரட்சியாளர்களையும் ஒடுக்கும் வாய்ப்பை நடுவண் அரசு இழக்க அணியமாயில்லை.

இதன் மூலம் 'தடா' 'என்.எசு.ஏ' போன்ற கருப்புச் சட்டங்களுடன் 'புலிகள் மீதான தடை' என்ற பெயரில் சட்டப் புறம்பான நடவடிக்கைத் தடுப்புச்சட்டம் 1967-இன் கீழ் தேசிய இனப் பற்றாளர்களும் புரட்சிகர குடிநாயக ஆற்றலர்களும் மேலும் ஒடுக்கப்படுவர். தமிழகத்தில் குடிநாயக உரிமைகள் இனி மெல்ல மெல்லச் சாகும். இத்தகைய உள்நோக்கம் கொண்ட' தடை' அறிவிப்பைப் பற்றி மக்களிடம் அம்பலப்படுத்த அனைத்துக் குடிநாயக ஆற்றல்களும் 'புரட்சிகர இயக்கங்களும் முன் வர வேண்டும் எனக் கோருகிறோம்

**தலைவர். பி.வி. பக்தவத்சலம்.**

மக்கள் உரிமைக் கழகம், தமிழ்நாடு

---

**இந்திய அரசே! விடுதலைப் புலிகள் இயக்கத் தடையை நீக்குக!**

இதழ் எண்: 154 இன் தொடர்ச்சி: தொடர்: 4

# இனம் மீண்டும் எழுகிறது!

வெங்காலூர்-- 'குணா'

**ஒட்டுப் பிறவிகள் :**

இத் திராவிட இயக்கத்தின் எதிரிகளாய் நெடுங்காலம் இருந்து வந்த தமிழகப் பொதுவுடைமை இயக்கத்திற்கு அதனின் முரண்பாடோ காழ்ப்போ உண்மையான பகையாக இருந்ததுமில்லை. அந்தத் திராவிடக் கொள்கையை முழுமை செய்யவல்ல மறு பகுதியாகத்தான் (Complementary) தமிழகப் பொதுவுடைமை இயக்கத்தினுடைய வரட்டியம் இருந்து வந்துள்ளது. ஆரியக் கொள்கையின்றித் திராவிடக் கொள்கை இல்லை; திராவிடக் கொள்கையின்றி ஆரியக் கொள்கை இல்லை. இந்த இரண்டுமே ஒன்றிலிருந்து மற்றொன்றெனப் பிரிக்கவொண்ணாத ஒட்டுப் பிறவிகள். (Siamese twins). ஆனால் அந்த ஆரியக் கொள்கையைத் தழுவிய வரலாற்றுப் பார்வையையும் வாழ்வியல் விளக்கங்களையும் கொண்டனவாகத் தமிழகப் பொதுவுடைமை இயக்கம் இருந்து வந்துள்ளது, எடுத்துக்காட்டுக்கு, "வேதக்காலம்" என்னும் ஒருகாலம் இத் துணைக் கண்ட வரலாற்றில் என்றுமே இருந்ததில்லை. மாக்சுமுல்லர் போன்ற அய்ரோப்பிய ஆண்டைகள் கற்பித்த 'வேதக்காலம்' என்னும் பொய்யான கூற்றைத் தழுவித்தான் இந்த பொதுவுடைமையினரின் வரலாற்று விளக்கமும் தொடங்கும். ஆனால் தமிழ்க் கழகக்(சங்க(காலம் என ஒன்றில்லை என்று மட்டும் அடித்துச் சொல்லி வேகாத பருப்பை வேக வைப்பதே இவர்களுக்கு எள் வடையைக் கண்ட இன்பம்! ஆரியக் கொள்கையைச் சாடினால் இந்தப் பொதுவுடைமையரின் முற்போக்கு நெஞ்சம் துள்ளி எழுந்து திராவிடத்தின் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைக்கும். ஆரியப் பார்ப்பனியக் கொள்கைகளிடம் கற்பிழந்து போன இந்த "முற்போக்கு" பாசறைக்குள் ஒரு பகுதிப் பார்ப்பனர்களும் பெரும்பகுதி மலையாளிகளும் ஒரு பகுதித் தெலுங்கர்களும் மிடுக்காக அணிவகுத்து நிற்பதைப் பார்க்கலாம். துமுக்கி ஏந்திப் புரட்சி செய்யப் போவதாகச் சொல்லிவந்த "மார்க்சிய இலெனினியத்" தலைமைகளைப் பாருங்கள்! அதேநிலைதான். தெலுங்கர்கள், மலையாளிகள், போன்ற பிறத்தியாரின் நலன்களைப் பேணும் தமிழகப் பொதுவுடைமைக் கட்சிகளும் தீவிரக் குழுக்களும் தமிழ்த் தேசிய விடுதலைக் கொள்கையைக் கடுமையாக எதிர்த்து வருகின்றன. தத்தம் இன நலன்களைக் கருதித்தான் அத்தலைமைகள் அவ்வாறு செய்து வருகின்றன என்பதைச் சொல்லித்தானா தெரிந்து கொள்ளவேண்டும்? ஒட்டு மொத்தத்தில் இந்த "முற்போக்கு" அணியினர் எல்லாம் இந்தி—இந்து வல்லரசியக் கொள்கையின் தரகர்களாக இருந்து கொண்டு தமிழக விடுதலை உணர்வும் ஓர்மையும் வேட்கையும் ஓர் அரசியல் வடிவம் பெறுவதைத் திட்டமிட்டே தடுத்து வருகின்றனர்.

வரட்டியத்தின் இரு பக்கங்களாக வருகிற திராவிடக் கட்சிகளும் பொதுவுடைமைக் கட்சிகளும் குழுக்களும் ஒட்டு மொத்தத்தில் தமிழினத்திற்கு எதிரானவை என்பதை உணர வேண்டும். அவற்றையெல்லாம் தூக்கி வரலாற்றுக் குப்பைத் தொட்டியில் எறிய வேண்டிய நேரம் வந்துவிட்டது. சாதிக்கேற்பச் சலுகைகளும் இட ஒதுக்கீடும் வேண்டுமெனக் கேட்டு வருகின்ற திராவிடச் சூழ்ச்சி தமிழகத்தில் உண்மையான ஒரு "சங்க" காலத்தைத்தான் தோற்றுவித்துள்ளதாகச் சொல்வதில் எவ்வளவு பெரிய உண்மை இருக்கின்றது?! ஒரு பக்கத்தில் ஈழத் தமிழரின் தேசிய விடுதலையை மட்டுமே ஆதரித்து வருகின்ற திராவிடர் அணி, தமிழ்நாட்டுத் தமிழர்கள் மட்டும் அத்தகைய தேசிய விடுதலையை நாடக் கூடாது என்கிறது! இந்த நிலையில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்ற இந்த அணி, தமிழினத் தேசிய நலன்களைச் சூழ்ச்சி நுட்பத்துடன் தமிழனைக் கெடுத்தும் காட்டிக் கொடுத்தும் வருவதைக் கண்கூடாகப் பார்த்து வருகின்றோம்.

இந்தி(ய) வல்லரசின் கண்ணில் விரலைவிட்டு ஆட்டிக்கொண்டிருக்கின்ற சீக்கியரின் சமய அடிப்படையியத்தில் (Fundamentalism) தற்காலிகமாக இப்போது இருக்கின்ற இந்தி—இந்து வல்லரசிய எதிர்ப்பு நிலையைச் சரிவர விளங்கிக் கொள்ளாமல் அந்தச் சீக்கியப் போராளியரை ஒழித்துக்கட்ட துமுக்கிகளையும் பிற படைக் கலங்களையும் இந்தி(ய) அரசிடம் இருந்து பெற்று வருகிற "மார்க்சிய இலெனினியக் குழுக்களும் பஞ்சாபில் உண்டு. தமிழ் மொழியையும் தமிழ் இனத்தையும் தமிழ்த் திருநாட்டையும் அயராது காட்டிக் கொடுப்பதுதான் "முற்போக்கு" எனக் கருதிப் பார்ப்பனிய இந்தி—இந்து வல்லரசியத்தின் கைக்கூலியாகத் தமிழகத்தில் இயங்கி வருகின்ற "முற்போக்குகளும் புரட்சிகளும்" கூடத் தமிழ் நிலத்தில் ஒரு தமிழ்த் தேசிய விடுதலைப் போர் வெடிக்கின்றபோது, அதைக் காட்டிக் கொடுக்காமலா இருப்பார்? பஞ்சாபில் செய்து வருவதைப் போன்ற அய்ந்தாம் படை வேலையைச் செய்ய மாட்டார் எனச் சொல்வதற்கில்லை. இதை முன்கூட்டியே அறிந்து தெளிந்து செயல்பட்டாலன்றித் தமிழகம் விடுதலைக் கொள்கையைக்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் அவர்கட்கு சரண் நாங்களே!

அரசியல் மாநாடுகள், பேரணிகள், ஊர்வலங்கள் இவை சென்னையில் நடக்கும்போதெல்லாம் நாற்சந்தி முனையில் திடும் என ஒரு நள்ளிரவில் அரசியல் தலைவர்களின் பூதாகரமான வெட்டுருவங்கள் (கட்-அவுட்டுகள்) முளைத்து எழுவதைக் கண்ட ஓர் அமெரிக்க நண்பர் என்னிடம் கேட்பதுண்டு: ஒரு தனிநபரை தலைவராகத் தேர்ந்தெடுக்கும் எங்கள் நாட்டில்கூட இந்த வெட்டுருவப் பண்பாடு (கட்-அவுட் கலாச்சாரம்)கிடையாது. ஒரு கோட்பாட்டை(தத்துவத்தை)த் தேர்ந்தெடுப்பதாகச் சொல்லிக் கொள்ளும் தமிழ்நாட்டில் தலைவர்களுக்கு இத்தனைப் பெரிய வெட்டுருவங்கள் ஏன்?"

ஏன்? எனக்கு விடை தெரியும்; என்றாலும் அதை அவரிடம் சொன்னதில்லை. தமிழர்கள் கோட்பாட்டை அன்று. தலைமையை வணங்குபவர்கள். தமிழ்நாட்டில் 'கருணாநிதி கட்சி' உண்டு; தி.மு.க. கிடையாது. 'செயலலிதா கட்சி' உண்டு. அ.தி.மு.க. கிடையாது. ஒரு காலத்தில் பேராயத்திற்கு(காங்கிரசுக்கு)ப் பெயர் 'காமராசர் கட்சி' அல்லது 'இந்திராவின் கட்சி'. பொதுவுடைமைக் கட்சியின் அனைத்து இந்திய மாநாட்டில்—அது சென்னையில் நடந்ததால்-வெட்டுருவம் (கட்-அவுட்) உண்டு. கவர்ச்சியான (வசீகரமான) ஒரு தலைவர் கிடைத்ததனாலேயே கோட்பாடு இல்லாவிட்டாலும் இங்குக் கட்சிகள் தழைத்ததுண்டு. மக்களை மயக்கும் தலைவர்கள் இல்லாமல் போனதனாலேயே இங்கு தேசியக் கட்சிகள் இறந்தது உண்டு.

அரசியல் மட்டுமன்று. நமக்குத் திரைப்படங்கள் கூட 'கமல் படம்' அல்லது 'ரஜினி படம்'-தான். டி.எம்.எசு. பாடிய திரைப்படப் பாட்டுகள் கூட எம். ஜி. ஆர். பாட்டு அல்லது சிவாஜி பாட்டுதான்! உண்மைகளோடு அன்று; அடையாளங்களோடு வாழ்க்கை நடத்துகிறோம் நாம். இந்திரா செத்தால் தீக்குளிக்கும் தொண்டர்கள் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் உண்டு. என்.டி. ராமாராவ் அரசு பதவியில் இருந்து வெளியேற்றம் செய்யபபட்டபோது அதற்காகத் தற்கொலை செய்துகொண்டவர்கள் ஆந்திரத்தில் இல்லை, தமிழ்நாட்டில் இருந்தார்கள். ரஜினிகாந்த் மனைவியோடு பிணக்குக் கொண்டு தனித்திருந்தால் அவர்கள் பேசிக்கொள்ள வேண்டும் என்பதற்காக வெளிப்படையாக உண்ணாநோன்பு இருக்கும் இளைஞர்களைத் தமிழ்நாட்டில்தான் பார்க்கமுடியும்.

ஏன்? தலைமையை வழிபடுவது தமிழனுடைய வழிவழிப் பண்பு. அரசன் போரில் வெற்றிபெற வேண்டுமென வேண்டிக் கொண்ட வீரர்கள், அப்படி அவன் வெற்றி பெற்றால் கொற்றவை தெய்வம் முன்பு தலையைத் துண்டித்துக் கொண்டு 'நவகண்டம்' கொடுக்கும் காட்சிகளை கல்வெட்டுகள் விளக்குகின்றன. அன்று போர், இன்று தேர்தல். இந்த நவகண்டங்களின் இன்னொரு புதின வடிவமாகத்தான் நச்சுக் (சயனைடு) குப்பி இன்றைக்கும் தமிழன் கழுத்தில் தொங்குகிறது. 'வெற்றி பெற்றால்' என்பது 'தோல்வி கண்டால்' என்று மாறியிருப்பதுதான் வேறுபாடு.

ஆள்பவர்களை அண்டி வாழ்ந்தவர்கள் மட்டுமல்லர் ஆண்டவனைப் பாடி வாழ்ந்தவர்களும் இதற்கு விலக்கல்லர். 'திருவுடை மன்னரைக் கண்டால் திருமாலைக் கண்டேன், என்று இந்தப்பத்திப் பெருமகிழ்வின் எச்சங்கள்தாம் இன்றைக்குப் பகுத்தறிவுத் தொண்டர்களின் நெஞ்ச(இதய) தெய்வ-வழிபாடு.

**தலைமையைப் பின்பற்றுவது அன்று. தலைமையை வழிபடுவதே தமிழனின் குணம்.** எந்த ஒரு வழிபாடும் தாழ்வு மனப்பான்மையினால் தோன்றுகின்றது என்று மாந்தவியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள். தமிழனின் தாழ்வு மனப்பான்மைக்குக் காரணம், அவன் தன்னைத் தானே அறிந்து கொள்ளாததும், தன்னைப் பிறருக்கு அறிவித்துக் கொள்ளாததும் ஆகும்- 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து', மரத்தில் இருக்கும் பலாக்காயைவிட, கையில் இருக்கும் களாக்காய் மேல் ஆசைப்பட்டு வீண் போகாதே, (வழிப்படுதல் என்னும் சொல்லுக்கும் பின்பற்றுவது என்பதுதான் தொடக்கக் காலப் பொருள். வழிப்படுதல் என்பதே வல்லினப் புணர்ச்சி நீங்கி 'வழிபடுதல்'என்னும் ஒரே சொல்லானது. —இதழாசிரியர்) 'ஆசைப்பட்டேன் ஊசிப்போச்சு' 'ஊழிற் பெருவலி யாவுள?' என்ற சொற்களையே கேட்டு வளர்ந்தவன் தமிழன்.

எதையாவது நிறைவேற்றவேண்டும் என்ற ஆசை இளம் அகவையிலேயே மழுங்கடிக்கப்படுவதும் கொள்கை உள்ளவனுக்கு அடுத்தடுத்து மனமுறிவுகளை ஏற்படுத்துகிற அரசியல் குமுக, குடும்ப அமைப்புகளும், உணர்ச்சியை மாத்திரமே தலையானதாகக் கொண்ட வாழ்க்கை முறையும் தவிர்க்க முடியாமல் தமிழனிடத்தில் ஒருதாழ்வு மனப்பான்மையையும், அதன் காரணமாகத் தன்னுடைய சிக்கல்களுக்குத் தீர்வை வேறு யாரிடத்திலோ தேடவேண்டிய சார்பு உணர்ச்சியையும் ஏற்படுத்தி இருக்கின்றன. தமிழனின் இந்தத் தாழ்வு மனப்பான்மையே தங்களை வளர்க்கும் என்பதை நன்கு புரிந்து வைத்திருக்கும் அரசியல்காரர்களும், திரைப்பட நடிகர்களும், மதத் தலைவர்களும்

(தொடர்ச்சி 7-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# இந்திய அரசு ஈழத்தமிழருக்கு வைத்த விலை!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

இரண்டாம் உலகப்போரின் தொடக்கத்தில் செர்மனி நாட்டு அனைத்ததிகாரி (சர்வாதிகாரி, (dictator) இட்லரும் (Hitler), உருசிய நாட்டு அனைத்ததிகாரி இசுடாலினும் (Stalin) ஒரு கமுக்க ஒப்பந்தம் (இரசிய உடன்பாடு) செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி, செர்மனி நாடு போலந்து நாட்டின் (Poland) ஒரு பகுதியையும், உருசிய நாடு போலந்து நாட்டின் இன்னொரு பகுதியையும் வன்கவர்பு (ஆக்கிரமிப்பு) செய்து கொண்டு, போலந்து நாட்டின் கனிம வளங்களைச் செர்மனிக்கும் உருசியாவுக்கும் பகிர்ந்து கொண்டு சென்றன. செர்மனி போலந்து நாட்டில் செய்த கொடுமைகள் பல. போர் முடிந்த பின்னர் செர்மனியின் படைத்தலைவர்கள் சிலரும், அரசியல் தலைவர்கள் சிலரும் போலந்து நாட்டில் இவர்கள் செய்த கொடுமைகளுக்காகத் தண்டிக்கப்பட்டனர் (சிறைத் தண்டனை அல்லது கொலைத் தண்டனை). இட்லர் (Hitler) போர் முடியுமுன்னமேயே இறந்து போனதால் (தற்கொலை செய்து கொண்டதால்) தண்டனைக்குத் தப்பினான்.

ஐரோப்பாக் கண்டத்தில் இந்த இழிவான, கரவான நிகழ்ச்சி நடந்து ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்குப்பின், இதே போன்ற இழிவான, கரவான நிகழ்ச்சியொன்று ஆசியாக் கண்டத்திலும் நடைபெற்றது. ஆண்டு 1987 சூலைத் திங்கள். இந்திய அரசும், இலங்கை அரசும் இந்திய—இலங்கை அமைதி உடன்பாடு (Indian-Sri Lanka Peace Accord) என்ற ஒப்பந்தம் செய்துகொண்டன. இந்திய அரசும், இலங்கை அரசும், ஈழத் தமிழ் மக்களின் விருப்பத்தைத் தெரிந்துகொள்ளாமலும், ஈழத்தமிழ் மக்களின் ஒப்பந்தத்தைப் பெறாமலும் செய்துகொண்ட இந்த உடன்பாடு ஈழத் தமிழ் மக்களை நிலையாகச் சிங்களவருக்கு அடிமைப்படுத்தும் அடிமை ஒப்பந்தம் (சாசனம்) என்பதை நடுநிலையாளர் உணர்வர்.

இவ்வாறு ஈழத் தமிழ்மக்களைச் சிங்களவருக்கு அடிமைப்படுத்திவைக்க இந்திய அரசு இலங்கையரசிடம் கேட்ட **விலை என்ன ?** அந்த விலை இந்தியத் தலைமையமைச்சர் இராசீவும், இலங்கைக் குடியரசுத்தலைவர் செயவர்த்தனாவும் எழுதிக் கொண்ட கமுக்க மடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த கமுக்க மடல்களை இந்திய, இலங்கை மற்றும் வெளிநாட்டுத் தாளிகைகள் விரைவிலேயே அம்பலப்படுத்தின. இந்திய அரசு ஈழத்தமிழருக்கு வைத்த விலை என்ன ? ஈழ மக்களைச் சிங்களவருக்கு அடிமைப்படுத்திக் கொடுப்பதற்காக இந்திய அரசு கேட்ட விலை என்ன? திருகோணமலைத் துறைமுகம்

ஆம்! ஈழத்தமிழ் மக்களைச் சிங்களவருக்கு அடிமைப்படுத்திக் கொடுப்பதற்கு விலையாக, இலங்கையரசு திருகோணமலைத் துறைமுகத்தை இந்திய அரசு தன் விருப்பம்போலப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கும். ஈழத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள திருகோணமலைத்துறைமுகம் மிகச் சிறப்பு வாய்ந்தது. உலகிலுள்ள இயற்கைத் துறைமுகங்களில் இது மிகப்பெரியது. (Large natural harbour).

இந்திய அரசும் இலங்கையரசும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, இலங்கையரசு இந்தியாவுக்குப் பிடிக்காத நாடுகளின் கப்பல்களைத் திருகோணமலைத் துறைமுகத்துக்குள் வரவிடாது. இந்தியா மற்றும் இந்தியாவுக்குப் பிடித்த நாடுகளின் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்தைப் பயன்படுத்த அனுமதிக்கும்.

மேலும், இலங்கையரசு திருகோணமலைத் துறைமுகத்தருகே பெரிய கன்னெய்க் கிடங்குகள் (petroleum storage tanks) கட்டித் துறைமுகத்துக்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களுக்குக் கன்னெய் கொடுத்து நிறையப் பணம் சம்பாதிக்கத் திட்டமிட்டிருந்தது. இந்திய அரசு ஈழத்தமிழ் மக்களைச் சிங்களவருக்கு அடிமைப்படுத்திக் கொடுப்பதற்கு இன்னும் விலையாக, இலங்கையரசு கன்னெய்க் கிடங்குகளை இந்திய அரசுடன் சேர்ந்து கட்டவேண்டும் என்றும், அந்தக் கன்னெய்க் கிடங்குகளிலிருந்து கிடைக்கும் ஏராளமான பணங்களை இலங்கையரசு இந்திய அரசுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்றும் கூறியது, இந்திய அரசு. இதற்கும் இலங்கையரசு இணங்கியது. இதன்மூலம் ஆண்டாண்டு தோறும் பலகோடிப் பணங்களை இந்திய அரசு சம்பாதிக்கமுடியும். திரைமறைவில் இந்திய அரசும், இலங்கையரசும் தமிழ் ஈழத்தைக் கொள்ளையடிக்கும்படி இன்னொரு திட்டத்தையும் செய்தன. தமிழ் ஈழ மண்ணிலே கோடிக் கணக்கான உருபா மதிப்புள்ள கன்னெய் (petroleum) புதைந்து கிடக்கலாம் எனச் சில நிலவியல் அறிஞர்கள் (geologists) கருதுகிறார்கள். ஈழத் தமிழ் மக்களைச் சிங்களவருக்கு அடிமைப்படுத்துமாற்றான் இந்தியத் தலைமையமைச்சர் இராசீவ் ஈழத்துக்கு இந்தியப் படையை அனுப்பி வைத்தபின், இலங்கையரசு தமிழ் ஈழப் பகுதியான மன்னாரில் கன்னெய்யைத் தோண்டித் தேடிப்பார்க்க (petroleum exploration) இந்திய அரசை அனுமதித்தது. அக் கன்னெய்யால் கிடைக்கவிருக்கும் பலகோடிக் கணக்கான பணங்களை இந்திய அரசும் இலங்கை அரசும் பங்கிட்டுக் கொள்ளும்.

இவ்வாறாக ஈழத் தமிழ்மக்களைச் சிங்கள-

வருக்கு அடிமைப் படுத்துவதற்காக இந்தியப் படையை ஈழத்துக்கு அனுப்பிவைத்து, இரண்டரை ஆண்டுக்காலமாக ஈழத் தமிழ்மக்களைப் பலவாறாகக் கொடுமைப்படுத்தி, ஏறத்தாழ பதினாயிரம் ஈழத் தமிழ்ப் பொதுமக்களைக் கொன்றும், அதனினும் பெருவாரியான ஈழத் தமிழ்ப் பொதுமக்களைக் காயப்படுத்தியும் (கையிழந்தோர் ஏராளம், காலிழந்தோர் ஏராளம்), ஏறத்தாழ ஈராயிரம் ஈழத் தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தும் (பத்துப் பதினோர் அகவைத் தமிழ்ச் சிறுமியர்கூட வட இந்தியக் காட்டு விலங்காண்டிகளால் கற்பழிக்கப்பட்டனர்), பல்லாயிரக்கணக்கான வீடுகள் அழித்தும், ஈழத் தமிழ்மக்களை அடிமைப்படுத்த முயன்ற இந்திய அரசு அதற்கு விலையாகக் கேட்டுப்பெற்றது திருகோணமலைத் துறைமுகத்தருகே கட்டப்படவிருக்கும் கன்னெய்க் கிடங்குகளிலிருந்து கிடைக்கும் கோடிக்கணக்கான வருமானங்களில் ஒரு பங்கும், மன்னார் மற்றும் தமிழ் ஈழப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் கோடிக்கணக்கான வருமானங்களில் ஒரு பங்கும், மன்னார் மற்றும் தமிழ் ஈழப் பகுதிகளிலிருந்து தோண்டியெடுக்கப்படவிருந்த கன்னெய்யால் கிடைக்கும் பலகோடி உருபாக்களில் ஒரு பங்குமேயாகும்.

ஈழத்திலே வாழும் மக்கள் இந்தி பேசுகின்ற வடஇந்தியராயிருந்தால் இந்திய அரசு இப்படி ஈழ மக்களைச் சிங்களவருக்கு அடிமைப்படுத்த முனைந்திருக்குமா? முனைந்திராது! ஈழத்திலே வாழுபவர்கள் தமிழினத்தைச் சார்ந்தவர்கள் என்பதால்தான் இந்திய அரசு அவர்களை அடிமைகளைப் போல விலைபேசியது.

(பின்குறிப்பு: இந்திய அரசு ஈழத்தமிழரைச் சிங்களவருக்கு அடிமையராக்க உதவியதற்கு வேறு ஓரிரு காரணங்களுமுண்டு. அவற்றைப் பிறிதோர் கட்டுரையில் ஆய்ந்து பார்ப்போம்.) 0

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழனை அன்று. அவனின் தாழ்வு மனப்பான்மையை வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். தலைமை வழிபாட்டில் இருந்து தமிழனை மீடக நம் பல்கலைக் கழகங்களாலோ, இதழ்களாலோ அறிவாணர்களாலோ, முடியாது. ஏனெனில் அவையும் இன்று இந்த வழிபாட்டையே மேற்கொண்டு இயங்கி வருகின்றன. தலைமை வழிபாடு, தாழ்வு மனப்பான்மை என்ற விலங்குகளால் தன்னைத்தானே பூட்டிக் கொண்டுவிட்ட தமிழனுக்கு, விடுதலை, வேறு எங்கும் வெளியில் இருந்து வரமுடியாது—அது அவனிடமிருந்தேதான் வரவேண்டும்.

—மாலன்

நன்றி. இந்தியா டுடே (தமிழ்) மார்ச்சு 20, 92

## இணைச்செயலர் எழுதுகிறார்

பேரன்புடையீர்,

வணக்கம். தங்களின் 'தமிழ்த் தேசிய இன விடுதலை' என்ற இலக்கு தெளிவானது என்பதைக் காலம் மெய்ப்பித்து வருகிறது. ஆயினும் இவ் விலக்கை அடைவதற்கு நம் இயக்கத்திற்கு ஓர் இயங்கியல் தன்மையை அளிக்க வேண்டும். ஏனெனில் இனவியல் சிந்தனை வட்டத்திற்கு வரமுடியாத நிலையிலேயே நம் மக்கள் இருக்கின்றனர். சாதிப் பிளவுகளைப் போலவே வெவ்வேறு சிந்தனை வட்டத்திற்குள்ளேயே குமுகச் சிந்தனையுள்ள இளைஞர்கள் தேங்கிக் கிடக்கின்றனர்.

ஆரியப் பார்ப்பனியம் தனக்கு எதிரானவர்களை எதிர்த்து அழித்ததைவிட அணைத்து அழிந்த வரலாறே மிகுதியாகும். அதுவே இன்றும் தொடர்கிறது. இவ்வுண்மையைக் குமுகப் புரட்சியாளர்கள் இன்றும் முழுமையாக உணரவில்லை. தாங்கள் மெய்யறிவு மூலம் காணும் குமுக உண்மைகளையும் அரசியல் திசைப் போக்கையும் மற்றவர்கள் பட்டறிந்துதான் உணர முடிகின்றது.

தாங்கள் எங்களுக்கு அளித்த அறிவு விளக்கங்களையே நாங்கள் உணர்ந்த வகையில், வெவ்வேறு கோணங்களிலும், வடிவங்களிலும் வெளிப்படுத்த விரும்புகின்றோம். அவ்வகையிலேயே சில படைப்புகளை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

உ.த.மு.க-வின் கிளைகளைப் பரவலாக அமைத்தால்தான் இதழ்களைக் குறித்த காலத்தில் கொண்டு வருவதற்கான பொருளியல் வலு கிடைக்குமென்று எண்ணுகிறேன். அச் சிந்தனையிலேயே செயல்படுகின்றோம்.

—க. கண்ணன். அறி,இ. கரடிப்பட்டி

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

**ஓ! ஓ! தமிழர்களே!**

கடந்த 17-2-91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத்தாள் பதிப்பு: 9-00
செய்தியச்சுத்தாள் பதிப்பு: 6-50
நூல் அஞ்சல் செலவு: 3-00.
தென்மொழி, சென்னை-5

**அன்பர்கள் கவனிக்க!**

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கேட்டுக் கொள்கிறோம்.

# தமிழின எழுச்சிக்கான தடயங்கள்...!

—மீட்பன்—

தமிழர் என்ற தகுதிபெற்ற இனமானம் மிக்கவரே ! உழைக்கும் மக்களின் உயிரோட்டமாகியுள்ள தேசிய இன விடுதலைக்குக் காரணம் கேட்பவர்களே !

அரங்கமின்றி ஆடலாமா ? வரைவின்றி ஒரு கொள்கை வெல்லுமா ? சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேருமா ? ஓடி ஓடி ஓய்வதா ?—இந்த வினாக்களுக்கு விடை தேடிய மார்க்சிய மனமே, இந்தியா தேசிய இனங்களின் 'சிறைக்கூடமாக' இருப்பதா ? சேரிகளாக—விலக்கப்பட்ட கனிகளாக உழைக்கும் மக்கள் வாழ்வதா ? என்று வீர வரிகளை எழுதிக்கொண்டிருக்கின்றோம் நாம் ! அதற்கான விடிவு தேடுகிறோம் ஏன் ?

இன்றைய மக்கள் நீரோடு—ஆற்றோடு—போய்க்கொண்டிருப்பதா? அவர்களின் ஓட்டத்தை—எதிர்நீச்சலை—நாம் காண மறுப்பதா ? இளைஞர்கள் விடிவை வரவேற்றுப் போர்க்கோலம் பூணுவதைக் காண்போம்; அவர்களை ஆதரவு தந்து போற்றுவோம் !

பறந்து காணும் போர்ப் பண்பினை ஆழஞ்செய்ய, ஓர் அமைப்புக் கட்டுதல் வேண்டும். அரசியல்காரர்கள் 25 ஆண்டுகளாகத் தமிழினத்தின் பேரில் செய்து வந்த ஏமாற்றுகளை எண்ணிப் பாருங்கள் !

1945-இல் 'இந்திய' அரசு 700 கோடி உருபாவைப் பாதுகாப்புக்காகச் செலவிட்டது. இன்று 'மக்கள் அரசு' அமைத்துள்ள நாம் 6000 கோடியைப் பாதுகாப்புக்காகக் கொட்டிக்கொடுக்கிறோம். என்னே, நம் தேசப்பற்று ! எப்படி இருக்கிறது நமது மக்களாட்சி !

உண்மைகளை மூடி மறைப்பதில் பயன் இல்லை. வெளிப்படையாக மக்களிடம் உள்ள அடிமைத்தனங்களுக்கான காரணங்களை விளக்கிச் சொல்வோம் !

மக்களை—மாணவர்களை அடக்கி ஒடுக்கிடக் காவல்துறையும், படைத்துறையும் வருகின்றன. **தேசிய இனங்கள் கேட்பது—வேண்டுவது—விடுதலையே ; பிரிவினை அன்று !**

பாதுகாப்பிற்கு 5000 கோடி எனில் அதில் தமிழ்நாட்டிற்கு ஆகும் செலவு 300 கோடி என்று கூறி, 50 கோடிதான் செலவிடுகின்றனர். இப் படைத்துறை அதிகாரிகளில் தமிழர் ஓரிருவரே. அவர்களும் "பார்ப்பனர்"களே என்றால், தமிழன் வயிறு எரிவதிலே என்ன தவறு ?

தமிழ்நாட்டில் நூற்பாலை என்றால் வடக்கே துணி ஆலை. நாம் சுரண்டப்படும் வகையிலேயே அனைத்துத் துறை உருவாக்கங்களும் தரகு முதலாளிகள் கைகளிலே முடங்கி வருகின்றன.

அரசியல் சட்டம் 19-ஆம் நெறியில் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் முதலீடு செய்யும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் எல்லையை விரிவாக்கவோ, குறைவாக்கவோ, அழிக்கவோ Art (3) அரசியல் சட்டத்தில் இடம் உள்ளது. 19 சி பிரிவு நெறியின் மூலம் பேச்சுரிமையைப் பறிக்கும் அதிகாரம் உள்ளது.

இவை எல்லாம் டாட்டா, பிர்லா, பணியா மார்வாடி—பார்சிகளுக்குக் கொள்ளையடிக்க வழி விடும் வாய்ப்புகள் அல்லவா ?

இந்திக்காரன் விளைக்கும் கோதுமையை விற்றுத் திரட்டிட—தமிழ்நாட்டைச் சந்தையாக்கிக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதுதானே உண்மை !

பன்றி மலம் கழிப்பதும், உண்பதும் வேறு வேறு இடத்திலேதான். ஆனால், சூழ்நிலை காரணமாகத் தமிழ்நாட்டுப்பன்றிகள் கெட்டுப் போய்விட்டன என்றால் பாருங்களேன். அந்த அளவிற்குத் தமிழர்கள் இழிவுபட்டுக்கிடக்கிறார்கள் என்றால், நாம் உண்மைத் தமிழர் என்று தலைநிமிர்தல் எப்படி ? எண்ணிப் பார்த்திடல் வேண்டும்!

தஞ்சை மண்ணைக் காவிரி வளப்படுத்த ஒன்றரைக் கோடி செலவு செய்கின்றனர். இதன் அலுவலகம் தஞ்சையிலே இல்லை; நெல்லையிலே உள்ளது. இப்படித் தமிழ்நாட்டுக்குள்ளே சிண்டு முடிச்சுப் போடுகிற அமைப்பை வைத்துக்கொண்டு என்ன சொல்லி அழுவது நாம் !

நமக்கு யார் நண்பர் ? யார் எதிரி ? என்று தெரியாமல் குழம்பிக்கொண்டிருக்கலாமா ?

கல்வியிற் சிறந்த தமிழ்நாட்டிலே இந்திய ஆட்சிப் பணிப் பதவிக்கு (IAS) 1985—இல் மூன்று பேரே தேற முடிகிறது—காரணம் தாய்மொழியாம் தமிழ்மேல் ஆணையிட்டோமே தவிர, தமிழ் அதிகாரமுள்ள மொழி அல்லவே தமிழர் அடிமைகள், தாமே !

1975 சூலை 13-இல் பாவலரேறு, 'தமிழ்நாடு விடுதலை'யின் பொருட்டுச் சிறை ஏகினார். 'தென்மொழி'யன்பர்களோடு ! அந்த வீறுமிக்க அணிவரிசை வளர்ந்து வருவதையே அண்மைக் கால உணர்வுகள் வெளிப்படுத்துகின்றன !

விடுதலை ஆர்வலர் காந்தமாகச் செயல்பட்டால் இளைஞர்கள் இயக்கத்தில் ஒட்டிக்கொள்வார்கள் ! அந்தக் காந்தம் நம் கொள்கையின் பிடிப்பிலே உள்ளது.

Scanned with CamScanner

விடுதலை உரிமை என்பது நாமே எடுத்துக் கொள்ளத் தக்கதே அன்றிக் கேட்டுப் பெறுவதோ, வாங்கிக் கொள்ளும் கடைச் சரக்கோ அன்று !

இந்த விடுதலைப் போரில் இரண்டகம் பண்ணுகின்றவர் நம்மிடையே இருப்பர். வழுதூரிலே 'தனித்தமிழ் நாட்டுக்கொடி' ஏற்றியவரைக் காட்டிக் கொடுக்க வெளியிலிருந்து யாரும் வரவில்லை. திராவிடப் பரம்பரைக் கட்சித் தலைமைகள் தாம் காட்டிக்கொடுத்தன என்ற கசப்பான வரலாற்றை எண்ணிப் பார்த்திடல் வேண்டும் !

நாவலர் நெடுஞ்செழியனாகி வளர்ந்த நாராயணசாமி தம் பேர்த்திக்கு 'ஸ்வப்பனா' என்று பெயர் சூட்டினாரே. இதுகாட்டுவது என்ன? மீண்டும் 'கருத்தியல் வளர்ச்சிக்குப் பாடுபடுவோம். போலிகள் உருவாகும் முன்னே இனம் கண்டு தகர்ப்போம், என்பதுதானே !

தெலிங்கானாப் போர்—விசால ஆந்திரக் கொள்கை—வங்காளதேசப் போர் பஞ்சாப் கிளர்ச்சி என்ற வரலாற்றுப் படிப்பினைகளைக் கற்றறிவோம்.

நம் கருத்து வடிவங்களை ஒருமுகப்படுத்தக் கற்றுக் கொள்வோம். கேட்போம்—சிந்திப்போம் என்ற உணர்வு 80 விழுக்காட்டினரிடம் உண்டா என்பது ஐயமே.

ஆகவே, சிந்திக்கவும் மாற்றுக் கருத்தைக் கேட்டுச் செம்மை செய்யவும் ஆன பண்பு பெருகுதல் வேண்டும்.

எதிர்ப்பிலேதான் கூர்மை தோன்றும். நேர் எதிர் விளைவே சிந்தனை. ஆர்வம் சிந்தனை முயற்சியினால் உண்டாகும் ! நமது கருத்துப் போராட்டம் எதிர்க்கருத்திலிருந்தும் ஒப்பு நோக்குதலிலிருந்தும் இணைத்துப் பார்த்தலிலும் அமைந்திருத்தல் வேண்டும் !

எண்ணம், எழுத்து —பேச்சு— செயல் தொடர்ந்தால் கட்டாயம் விடுதலை உண்டு. அது நூற்றாண்டுகளுக்குப் பிறகேனும் வாய்க்கும் [ என்பது உறுதி !

பட்டறிவு—முடிவு, திடுமென ஏற்படுவதன்று. பெரியார் தொட்ட முயற்சி, இன்று தொடர்ச்சியில் உள்ளது.

இன்று தன்னம்பிக்கைக் குறைவு—மழுப்பல் தன்மை—உள்ளது. அதனைக் கூர்மை செய்வோம்.

நாம் பேசித் தீரவில்லை. அது செயலை நோக்கிய பேச்சு என விரிகிறது !

அரசு—குடும்பம்—குமுாய அமைப்புத் தடைகள் உண்டு.

ஆயிரம் முறை ஆராயலாம் வினைக்களைத் தொடுக்கலாம்—துணிந்தபின் எண்ணுவது என்பது இழுக்கு அன்றோ ?

பெரியார் கழகத்தில் சேருமுன்னர் ஆயிரம் ஐயங்களைக் கேட்கப் பெரியார் ஐயங்களை அகற்றிட ஒப்பினார். ஆனால், கழகக் கொள்கைகளை ஏற்ற-பிறகு—உள்ளே வந்த பிறகு— படைஞர்போலப் பின்பற்றிடக் கூடியவரையே தொண்டர்களாக்-கினார் !

அமைப்பை ஏற்று வநதவரை மதிக்கக் கற்றுக் கொள்வோம். அதில்தான் உரிமை உணர்ச்சி உள்ளது.

பதியம் போடக் குழிதோண்டி வித்திட்டு வருகிற நாம் அமைவாகச் செயல்படக் கற்றுக் கொள்வோம். அதற்குப் பொது மாந்தனிடம் இல்லாத தனிச்சிறப்பு உள்ளவர் நாம் எனக் கருதாமல் 'தன்னை' விடுவித்துக் கொள்ளுவோம் !

உள்ளே—வெளியே எங்கும் போராட்டம், இரண்டிலும் ஏற்படும் மகிழ்ச்சியைப் போற்றுவோம்.

பதப்படுத்தி—உறுதிப்படுத்திச் செயல்படுதல் வேண்டும்— சக்கரம் போல் சுழல்வோம் ; இயங்குவோம். சக்கரம் ஒரு பல்லை இழந்தாலும் சுழல்வதில்லை. ஆகவே, ஒன்றிணைந்து இயங்குவோம் !

விரல் இடுக்கில் ஒழுக விடுவதுபோலக் கொள்கையை நழுவவிடும் பேதைமையைக் கைவிடுவோம்!

தமிழின மீட்சி அரிய செயல்; பெரிய முயற்சி! பெரியார் பதப்படுத்தியதை நாம் உறுதிப்படுத்துவோம். ஒருவரை ஒருவர் நம்பிச் செயல்படுவோம். '**கட்டுவது பெரிதன்று; கட்டிக் காப்பது பெரிது**' என்பதை உணர்வோம்.

உள் முகமாகக் கட்டமைத்திடுவோம். வேறுபடுத்தாமல் செல்லுவோம். நாடகமோ, கதையோ எழுதுவதன்று ; சாலைப்பணியோ, தோட்டப்பணியோ ஆகாது '**இனமீட்சிப் போராட்டம்**'!

நூறு ஆண்டுத் தாய்மொழிச் சிறப்பில்லாத இனமெல்லாம் 'விடுதலை' பெற்றுள்ளன ! நெடிய வரலாறும் உயர்ந்த மொழிச் சிறப்பும் உடைய இனமுற்ற வரலாற்று வீழ்ச்சி, யானையின் வீழ்ச்சி-மூழ்கிய பெருங்கப்பலின் வீழ்ச்சி போன்றது.

இந்த வீழ்ச்சியைச் சரிசெய்து மீட்சி செய்வது விளையாட்டன்று. இதனைப் பேசிப் பேசி, எண்ணி எண்ணிச் செயல்படல் வேண்டும் !

நேரடியான போரன்று— பலவகையான உத்தியுடையது. பயிற்றும் முன்பு கற்பித்திடவும், வரலாறு கூறவும் அறிவோம்.

உரிமை மட்டும் கற்பித்தல் போதாது ; நமக்கு ஆழமான கூறுகள் உள. தமிழ்மொழி மீட்சி வரலாறு,.. முதலிய அனைத்து நிலைகளிலும் உண்மையுணர்ச்சி வேண்டும்!

மதம்—சாதி— பதவி—பொருள் நோக்கம்

கூடாது. சார்பு, பற்று கூடாது! விடுதலை வேண்டும். ஒரு சறுக்கு—பிசகு ஏற்பட்டாலும் போராடுவதில் தளர்ச்சி ஏற்படும். தளர்ச்சி-மெலிவுகளைத் தாங்கி எழுதுதல் வேண்டும்.

தமிழனுக்கென்று பெற்ற உணர்ச்சி—இதனை—உரிமையை—வெளியில் இருந்து பெறுதல் இயலாது. அறிவியல் பெற வெளிநாட்டறிவு வேண்டும். மார்க்சியம் ஒரு கொள்கை அவ்வளவுதான். அன்றுள்ள தமிழகத்தை நாம் கேட்க முடியுமா? இன்று நலிந்து சுருங்கிய தமிழகத்தை அன்றோ நாம் காண்கிறோம்.

கருத்து வேறுபாடு நீடிக்கக் கூடிய இன்று இணைவு; நாளை வேறுபாடு நிகழலாம். அதற்காகச் சோர்வுறுதல் கூடாது.

கருத்து—துமுக்கி—துப்பாக்கி என்ற கருவிகள் மட்டும் போதா? பொதுமக்கள் ஆற்றலையும் வளர்த்தெடுத்தல் வேண்டும்!

தொலைக்காட்சி நமக்கில்லை, உழைக்கும் மக்களும், தொழிலாளர் உழவரும் நமக்கு உள்ளனர்! நாம் ஒரே நோக்கில் செல்வோம்! "ஒற்றைக் கால் மண்மீதும் ஒற்றைக்கால் நீரிலுமேல், எற்றைக்கோ நாம் நீந்துவது?"

'அழுதகது சாகும் குழந்தை'யின் தீவிரப் போராட்டம்— ஏற்றத்தாழ்வு உள்ளவரை கடவுள் நம்பிக்கை இருக்கும்—தொடரும்!

துணிந்தால் கடல் கணுக்கால் அளவே; இமையமும் எறும்பாகும்! முதலாளிய அடிமை நாடாகியதன் தாக்கம், நம்மைக் கொள்கையற்றவர்களாக்கிவிட்டது. மீண்டும் மீண்டும் நம்மைப் புதுப்பித்துக்கொள்வோம்; துணிவோம்.

பெரியாரின் 17-9-73இல் வெளியிட்ட இறுதிச் செய்தி, நமக்கெல்லாம் ஓர் இலக்கியம்—உறுதிச் சொல் ஆகும். ஆனால் பெரியார் போன சூட்டோடு, 1976 ஆகத்தில் கழக நடுவம், 'தனித் தமிழ்நாடு' 'தி.க.வின் இலக்கு அன்று' என்று முடிவெடுத்தது. 1962-இல் தி.மு.க. 'திராவிட நாட்டை'க் கைவிட்டது.

அண்ணா 'இரட்டைக் குழல் துமுக்கி என்றார், இன்று, 'பெரியாரைப் பிழைத்து ஒழுகும்' அறியாமை மூடக்கொள்கையெல்லாம் 'திராவிடச் சார்பு'க் கட்சிகளிடம் ஊடுருவி வளர்ந்துள்ளன! தேர்தலில் தி.மு.க. நுழையும்போது அண்ணா, நான் தமிழகத்தின் 'சார்லசு பிராட்லா' என்றார். மீண்டும் மீண்டும் 'கொள்கைப் போர்' நடத்தப் பதவிகளைத் தூக்கியெறிவோம் என்றவர்கள், இன்று 'கொள்கைகளை' விற்றுவிட்டுச் சிறு பதவிகளையும் ஒட்டியப்பின் 'வெட்டினாலும் விட்டுப் பிரியமாட்டோம், என்ற நிலைமைக்கு வந்துவிட்டார்கள்!

'கண்ணைத் தந்து சித்திரம் வாங்குவது' போன்ற அவலத்திற்கு ஆளாக்கப்பட்டவர்கள், 'புதிய' பார்வையும், செயலும் பெற்றிடப் பாடாற்றுவோம்!

அரை நிர்வாண ஆட்டக்காரி போலக் 'கொள்கைகளை' நாம் எச்சரிக்கையாக இருப்போம்.

1907-24 களில் இலெனின் 'தன்னாட்சி உரிமைக்குப் பாடுபட்டார்! இங்கே, 1930 இல் பலநாடுகள் கொண்ட நாடு' என்று ஒப்புக்கொண்டனர். 1938-இல் தமிழ்நாட்டுக் கோரிக்கை எழுந்தது.

1953— மொழிவாரி மாநிலங்கள் உருவாகின. பெரியார், 'திராவிட' நாடு என்றது தமிழ் நாட்டை'யே என்பதை நாம் நினைவில் வைத்தல் வேண்டும்!

முதன்முதலில் 'பொதுவுடைமைக் கட்சி' அறிக்கையை வெளியிட்ட பெரியார்—சிங்காரவேலர்களை நாம் மறந்து விடுதல் இயலுமா, 'தமிழ் நாட்டில்?

சாதிக் கண்ணோட்டம், 'வர்க்கக்' கண்ணோட்டம் ஏற்படத் தடையாக இருப்பதைத் 'தத்துவ'க் குழப்பம் கொண்டவர்கள் காண மறுத்தார்கள். 'வைக்கோல் மேல் படுத்து மாட்டை விரட்டும் நாய்' போலச் செயல்பட்டவர்களையே நாம் கண்டு வந்தோம்! வெயர்வை கலந்தும் சாதி கலக்க வில்லையே...ஏன்?

இந்தியாவிலேயே அதிகம் பரிசுச்சீட்டு விற்கும் மாநிலம் 'தமிழ்நாடு' தானும். 'பகுத்தறிவுப் பகலவன்' தோன்றிய நாட்டில் 250கோடி உருபாவிற்குமேல் பரிசுச்சீட்டு வாங்கி அலையும் பித்தர்களை உருவாக்கி விட்டுவிட்டார்கள்!

இந்தியா...அனைத்திந்தியா (All India).. மீதியுள்ள இந்தியா (Rest India)... ஆகியுள்ள போது, அகண்ட இந்தியா—பாரதம்—கேட்பவர்களின் 'அதிகார வெறி'யை'க் கொடு நெறியை'யை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும்!

9-9-'76 இல் வீரமணி 'மிசா'வைக் கண்டதும் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை 'விடுதலை'யிலிருந்து நீக்கிவிட்டதன் காரணங்களை நாம் அறிதல் வேண்டும்!

வீழ்ச்சியுற்ற இனத்திலிருந்து தோன்றும் தலைமைகளிடம்" தளர்ச்சி இயல்பானதே. அத்தளர்ச்சி வாராவண்ணம் உணர்ச்சியும் கிளர்ச்சியும், மலர்ச்சியும் கொள்வோம்! O

## தீமைகளுக்கு மூல காரணம் இந்துமதமே!

இந்த நாட்டில் ஒழிக்கப்பட வேண்டியனவாகக் கருதப்படும் ஏழ்மை, கொத்தடிமை, மதுக்குடிப்பு, பரத்தமை(விபசாரம்), ஒழுக்கக்கேடு, சாதிகள்—முதலிய அனைத்துத் தீமைகளுக்கும் மூல காரணமாக இருக்கின்ற தீமை இந்து மதமே!

# இந்தியாவில் ஒடுக்கப்பட்டுச் சுரண்டப்படுகின்றோம்!

க. கண்ணன். அறி.இ.

இன்றைய இந்திய அரசு என்பது, ஆரியப் பார்ப்பனிய—தரகு முதலாளிய—இந்தி இனச் சார்போடு இயங்குகிறது.

இந்தி இனச் சார்பு முதலாளிகளும் மற்ற தேசிய இனங்களின் தரகு முதலாளிகளும் ஆரியப் பார்ப்பனியத்திற்குள்ளும் பெருந் தரகு முதலாளியத்திற்குள்ளும் அடக்கமாகி விடுகின்றனர்.

இறுதியில் பெருந் தரகு முதலாளியமும் ஆரியப் பார்ப்பனியமும் கால சூழலுக்கு ஏற்றவாறு எதிரெதிராக இயங்குவதாக நடித்தும், ஒன்றுக்கொன்று அடக்கமாகி, ஒன்றாகவும் இயங்குகின்றது.

இதற்கு எடுத்துக்காட்டாக, இந்தியப் பார்ப்பனிய அரசுக் கட்டமைப்பை ஒரு சிறிய அளவிலேனும் உடைப்பதற்கான முரண்பாடுகளை உருவாக்குவதற்குரிய மண்டல் குழு செயற்படுத்தத்தைச் சீர்குலைப்பதாகும். தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களைத் திசை திருப்புவதற்கும், பெருந்தரகு முதலாளியச் சார்புள்ள பேராயக்கட்சி (காங்கிரசு), அயோத்தி இராமன் கோவில் சிக்கலையும், இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டு நாடகத்தையும் முன் வைத்து ஆரியப் பார்ப்பனியச் சார்புள்ள பாரதிய சனதா கட்சி நடத்திய இரத வழிப் பயணங்களுக்கு மறைமுகமாக உதவியதை நாம் நுட்பமாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவ்வாறே புதிய பொருளியல் கொள்கை என்ற பெயரில் இந்தியப் பொருளியலை உலக முதலாளியத்திற்கு முழுமையாக அடகு வைத்த பெருந் தரகு முதலாளியச் சார்புள்ள பேராயக்கட்சிக்கு, ஆரியப் பார்ப்பனியச் சார்புள்ள பாரதிய சனதா கட்சி, அப்பொருளியல் கொள்கையை முழுமையாக எதிர்க்காமல், எதிர்ப்பதாக நாடகமாடி மறைமுகமாக உதவுவதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகவே உளவியல் அடிப்படையில் மக்களை ஒடுக்குவதற்கு ஆரியப் பார்ப்பனியமும், உடலியல் அடிப்படையில் மக்களை ஒடுக்கிச் சுரண்டுவதற்குக் காவல் துறை மற்றும் படைத் துறையைக் கொண்ட தரகு முதலாளியமும் இணைந்து இயங்குகின்றன. அனைத்து நிலைகளிலும் இறுகிப் போய்விட்ட மக்கள் அமைப்பை உடைத்து முன்னோக்கிச் செலுத்துவதற்கு, குமுகவழி பல்வேறு சாதியினராகவும், மத வழிச் சிறுபான்மையினராகவும், தொழில் வழிப் பாட்டாளி வகுப்புகளாகவும் பொருளியல் வழிச் சிறு சிறு தேசிய இன முதலாளிகளாகவும், மொழி வழித் தேசிய இனங்களாகவும் மக்கள் வெவ்வேறு கருத்து நிலைகளில் இருப்பதால், இவர்கள் அனைவரையும் உள்ளடக்கிய—இயல்பாக ஒருங்கிணையக் கூடிய மொழி வழித் தேசிய இன விடுதலைப் போராட்டங்களே இன்றைய குமுக—பொருளியல்—அரசியல் சூழ்நிலையில் சரியான குமுக இயங்கியல் நெறியாகும்.

ஆரியப் பார்ப்பனியமும் தரகு முதலாளியமும் ஒரே உடலின் இரண்டு கைகளைப் போன்றது; இரண்டும் ஒன்றே. ஆகவே இவற்றுக்கு நேர் எதிராக உள்ள மொழி வழித் தேசிய இனச் சிந்தனையாளர்களும், மார்க்சிய—இலெனினியச் சிந்தனையாளர்களும், அம்பேத்காரிய—பெரியாரியல் சிந்தனையாளர்களும் ஒரே முனையில் மக்கள் ஒன்றிணைவதற்கான வழியைக் காட்டுவார்களாக! O

---

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணெனப் பேணி வளர்க்க முடியாது. ஏதோ தெலுங்கர்களையும் பார்ப்பனர்களையும் தூற்றுவது தான் இந்தக் கட்டுரையின் நோக்கம் எனத்தமிழின எதிர்ப்பு அணியினர் நம்மைக் கொச்சைப்படுத்திப் பேசலாம். நம்முடைய நோக்கம் அஃது அன்று.

யாழ்ப்பாணம் போன்ற தமிழர்கள் பெரும்பான்மையராக உள்ள நிலப்பரப்பும் தமிழ் மண்ணை இன்னும் இழக்காமல் தமிழ்மக்கள் கட்டுக்கோப்பாக உள்ள சூழலும், தமிழகத்தில் பல இடங்களில் இன்று இல்லை. அந்த ஈழத்தின் கிழக்கு மாநிலத்தை விடக் கேடுகெட்ட நிலையில் தமிழ் மண்ணை தமிழரிடம் இல்லாத அளவுக்கு மாற்றாரிடம் நாட்டை இழந்து நிற்கின்ற நிலையில், தமிழீழ தேசிய விடுதலைப் போரை இங்கு அப்படியே 'போலிகை' செய்துவிட (Imitate) முடியாது. இந்த உண்மையை விளங்கிக் கொள்ளவேண்டும். மக்கள் தொகையியல் (demographic) படர்ச்சிகளையும் விளங்கிக் கொள்ள வேண்டும். பம்பாயிலுள்ள தமிழரோ, தில்லியிலுள்ள தமிழரோ, கேரளத்திலுள்ள தமிழரோ, கருநாடகத்திலுள்ள தமிழரோ அங்கெல்லாம் பொருளியல் வலிமையும் அரசியல் வலிமையும் அற்ற உண்மையான தேசியச் சிறுபான்மையராகத்தான் உள்ளனர். ஆனால் தமிழர்கள் 80 விழுக்காடாக உள்ள தமிழகத்திலோ தமிழரல்லாத் தேசியச் சிறுபான்மையரிடமே அத்தனை நிலவுடைமைகளும் சொத்து வளங்களும் தொழில் வளங்களும் குவிந்து கிடக்கின்ற அவலத்தைப் பார்க்கிறோம். இந்த உண்மையை விளங்கிக் கொள்ளாமல் தமிழ்த் தேசிய விடுதலை நெறிக்கு ஒரு செயல் வடிவம் தர முடியாது. அதைக் கருதித்தான் தெலுங்கரின் வல்லாண்மை பற்றியும் மலையாளிகளின் குடிபுகல்களைப் பற்றியும் பிறரும் வந்தேறுவதைப் பற்றியும் பேசவேண்டி வந்தது. (தொடரும்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது அங்குள்ள நாற்காலிகள், மிசைகள், கதவுகள், பலகணிகள் அனைத்துமே காசு- இல்லை-பணம்-பணமாகக்- கவர்ந்து கொள்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் பொது மக்கள் சட்டைப் பைகளில் உள்ள உருவாத் தாள்களை அரசு அலுவலர்கள் கைவிட்டு எடுத்துக் கொள்கின்றனர். மடிகளில் உள்ளதையும் அவிழ்த்தெடுத்துக் கொள்கின்றனர். அரசு அலுவலகங்களில்தாம் இப்படி என்றில்லை, மருத்துவமனைகள், பிள்ளைப் பேற்றகங்கள். உணவுப் பங்கீட்டுக் கடைகள், பொது நூலகங்கள், முதலிய அனைத்து நிலைகளிலும் கையூட்டு (இலஞ்சம்) தாண்டவமாடுகிறது. ஞாய விலைக் கடைகளுக்கு வரும் பயன்படு பொருள்கள், மளிகை, உணவுப் பொருள்கள் முதலிய அனைத்தும் வெளியில் உள்ள கடைக்காரர்களுக்கு ஊதியத்திற்கு வெளிப்படையாகப் பட்டியலின்றி விற்கப்படுகின்றன. அங்குள்ள பொருள்களில் பத்தில் ஒரு பங்குதான் பொதுமக்கள் விற்பனைக்குப் போகின்றன.

இப்படி எத்தனையோ கொள்ளையடிப்புகள் நடந்தாலும் செயலலிதா மேல் பார்ப்பனர்கள் எந்தக் குறையும் சொல்வதேயில்லை. அவ்வாறு ஓரிரு செய்தித்தாள்களில் கூறப் பெற்றாலும் அவர்கள் செயலலிதாவைக் கீழிறக்க விடமாட்டார்கள். ஏனெனில், பார்ப்பனர்களுக்கு செயலலிதா ஆட்சி பொற்காலம் என்பதை எவருமே மறுக்க முடியாது. O

## 'தென்மொழி' அன்பர்களும்' 'தமிழ்நிலம் நோக்கமும் !

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

'பாவலரேறு'தான் அனைத்தையும் சிந்திக்க வேண்டும்; எழுத வேண்டும்; 'அவரே எல்லாம்' என்றிருந்த அன்பர்கள், இப்போது, உ.த.மு.க 'அவரின்றிச் செயல்படும்' என்று அறிவிப்பிலிருந்து புரிந்து கொண்டு, ஐயங்களையும், வினாக்களையும் எழுப்புவதன் வழியாகத் தமிழர்கள்—அவர்கள்—சிந்திக்கவும், எழுதவும் செய்கிறார்களே ! மகிழ்ச்சிக்குரிய மாற்றமன்றோ ? தாயின் முன்றானையைக் 'கைவிடு' 'கைவிடு' என்றால் விட்டு விடுமா குழந்தை ? அதற்கு நடை வந்துவிட்டது. எனவே, உலக நாட்டம் வந்துவிட்டது. அது தாய்க்கு முன்னே—தளர்நடை இட்டு ஓடுகிறது. அந்த 'ஓட்டம்' இன்னமும் 'தாயின் நடையைவிட விரைவானதில்லையே !

எனவே, 'தமிழ் நிலம்' தன் தேவையறிந்து, 'தமிழின' முன்னேற்றம் என்ற ஒன்றினையே நோக்காகக் கொண்டு உலகினர் யாவரையும் உறவாக்கிக் கொள்ளும். இதற்கு உ.த.மு.க, 'உண்மை'யை-உழைப்பை அடிப்படையாகக் கொள்ளும். எனவே, தமிழகம், இந்தியம், திராவிடம், உலகம் யாவற்றோடும் உடன்படும்; முரண்படும். இவ்விரண்டு போக்கிலும் 'தமிழினம்' முன்னேறும் ! வாழ்க. உ. த. மு. க ! —பறம்பை அறிவன், பறம்புக்குடி.

TN/MS (C)657

நூல்-அஞ்சல்

பெறுநர்

உ.த.மு.க. சார்பில்

# தமிழ் வழிக் கல்வி-வலியுறுத்தும் மாநாடு!

## கலந்தாய்வுக் கூட்டம்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் சார்பில், 'தமிழ் வழிக் கல்வி—வலியுறுத்தும் மாநாடு நடத்துவதற்கான செயல் திட்டம் பற்றிச் சிந்திக்க, பொறுப்பாளர்களின் கலந்தாய்வுக் கூட்டம், வரும் 30-8-92 (ஞாயிறு) அன்று காலை 9-00 மணி முதல் மாலை 5 மணி வரை, மதுரை 10, பனகல் தெரு, பாண்டியன் நகர், வீரமணி இல்லத்தில் நடைபெறும்.

கூட்ட ஏற்பாடுகளைப் பொதுச் செயலாளர் முன்னின்று நடத்துவார். கூட்டத்திற்கு வருவோர்க்குத் தங்கல், உணவு ஆகியன அளிக்கும் பொறுப்பினைத் தமிழ்மொழிப் பற்றியக்க நெறியாளர், மானமிகு மா. ச இராமசாமி அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார். உ.த.மு.க. பொறுப்பாளர்களும், ஆர்வலர்களும், அன்பர்களும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு சிறப்பளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர். இது தொடர்பாக, தனி அறிக்கைகள் அனைவருக்கும் அனுப்பப் பெற்றுள்ளன.

பொதுச் செயலாளர்.

குறிப்பு : 1) 'தமிழ் வழிக் கல்வி'—ஆய்வுக் குறிப்புகளை 20-8-92க்குள் எழுதிப் பொதுச்செயலாளர்க்கு விடுக்கவும்.

2) வருகையை உறுதி செய்து 27-8-92க்குள் மடல் எழுதுக. தங்கல், உணவு ஏற்பாடு செய்ய.

ஆசிரியரும், வெளியிடுபவரும்.
பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
தென்மொழி 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

Scanned with CamScanner